தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத்திட்டம் – ஊரக மற்றும் நகர பகுதிகளிலுள்ள பள்ளி சத்துணவு மையங்களிலுள்ள சமையலறைகளை (Kitchens) நவீன படுத்துதல் – ரூ.1.50/– கோடி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி3) துறை

அரசாணை (நிலை) எண்.1 நாள் 04.01.2007

படிக்கப்பட்டது:

1) சமூக நல இயக்குநரின் கடித எண்.41082/சஉதி/06, நாள் 30.8.2006.
2) துணைச் செயலரின் கடித எண்.286 (பா.கி) நிதித்துறை, நாள் 20.11.2006.

---

ஆணை :-

புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் தற்போது பள்ளி சத்துணவு மையங்களில் சமையல் செய்வதற்கு ஊரக பகுதிகளில் கிடைக்கும் விறகுகளையே (Country woods) பெரிதும் சமையலர்கள் பயன்படுத்துகின்றனர். இதற்கென எரிபொருள் செலவினமாக உணவூட்டு செலவினத்திலிருந்து (Feeding charges) ஒவ்வொரு பயனாளிக்கும் நாள் ஒன்றுக்கு 11 பைசா அனுமதிக்கப்படுகிறது. 400 மாணவர் சத்துணவு பெறும் மையத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.1220/– செலவிடப்படுகிறது. இதனை மாற்றும் வகையில் ஒரு மாதத்திற்கு தேவையான நான்கு கேஸ் சிலிண்டர்கள் வாங்கி பயன்படுத்த அரசு அனுமதியிடுகிறது. ஊரக பகுதிகளில் கிடைக்கும் விறகுகளை பயன்படுத்தி சமையல் செய்வதால் புகையின் காரணமாக உணவு சமைக்கும் சமையலர்களின் ஆரோக்கியம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. சமையல் பாத்திரங்களும் கரிபடிந்து பராமரிப்பது சிரமமாகிறது. சமையற்கூடங்களும் (Kitchen sheds) பெரும்பாலான இடங்களில் சரியான புகைபோக்கிகள் இல்லாத காரணத்தால் புகைபடிந்து பொலிவிழந்து விடுகிறது. சுற்றுச் சூழலும் பெருமளவு பாதிக்கப்படுகிறது. மேலும் மழைக்காலங்களில் விறகுகளை வாங்கி சமையல் செய்து குறித்த நேரத்திற்குள் மாணவ மாணவியர்களுக்கு உணவு வழங்குவதிலும் பல நடைமுறை சிரமங்கள் உள்ளன. இந்த குறைபாடுகளை களையவும் மகளிரின் ஆரோக்கியம் மற்றும் சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் பள்ளிகளிலுள்ள சத்துணவு சமையலறைகளை (Kitchens) நவீன படுத்துவது மிகவும் அவசியமாகிறது என்றும், சத்துணவு மையங்களிலுள்ள சமையலறைகளை நவீனபடுத்தும் முகமாக முதலில் இந்த ஆண்டு இதனை ஒரு முன்னோடி திட்டமாக (As a Pilot Scheme) சுமார் 400 பயனாளிகளுக்கும் அதிகமாக உள்ள மாநகராட்சி மற்றும் சில தேர்ந்தெடுத்த நகராட்சி பகுதிகளிலுள்ள பள்ளி சத்துணவு மையங்களில் இத்திட்டத்தை செயல்படுத்தலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் மையங்களுக்கு எரிவாயு (LPG) சிலிண்டர்களுடன் கூடிய எரிவாயு

இணைப்புகள் வழங்கி சமையல் செய்வதற்கு 2 பர்னர்களுடன் கூடிய பெரிய அளவிலான எரிவாயு அடுப்புகள் வாங்கி வழங்கி சமையலறையில் (Kitchens) மகளிர் நின்று சமைக்க ஏதுவாக சமையல் மேடையும் எரிவாயு சிலிண்டர்களை பாதுகாப்பாக வைத்து குழாய் மூலம் எரிவாயுவினை பர்னருக்கு எடுத்துச் செல்லும் வசதியும் பாதுகாப்பு கருதி திரும்ப வரவிடாத வால்வு (Non-return volve) மற்றும் காப்பு வால்வு (Safety valve) அமைத்து பிற பாதுகாப்பு வசதிகளையும் (Safety Measures) ஒரு பள்ளி சத்துணவு மைய சமையலறையை நவீனப்படுத்த தோராய செலவினமாக நான்கு சிலிண்டர் வாங்க டிபாசிட் ரூ.850/– ம் ஒரு ரெகுலேட்டருக்கு ரூ.100/– ம் ஆக ரூ.950/– வீதம் 4 சிலிண்டருக்கு ரூ.3800/– ம் இரண்டு பர்னர்களுடன் கூடிய பெரிய எரிவாயு அடுப்புக்காக ரூ.5,200/– திரும்ப வரவிடாத வால்வு, காப்பு வால்வு, பாதுகாப்பு வசதிக்காக ரூ.5,000/– மும் அடுப்பு மேடை, தடுப்புச் சுவர், புகைபோக்கி போன்றவை அமைக்க ரூ.6,000/– ஆக மொத்தம் சமையலறையை நவீனபடுத்த ஒரு மையத்திற்கு தோராயமாக ரூ.20,000/– (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) செலவினம் ஆகும் என்று தெரிவித்து சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாநகராட்சி பகுதி பள்ளிகளிலும் வேலூர், விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், திருநெல்வேலி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் ஆகிய நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளி சத்துணவு சமையலறைகளை ரூ.1.50/– கோடி செலவினத்தில் நவீனப் படுத்த சமூக நல இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

2) சமூக நல இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்தது. சமூக நல இயக்குநரின் கருத்துருவை ஏற்றுக் கொண்டு இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள மாநகராட்சி/ நகராட்சி பள்ளிகளில் அமைந்துள்ள 750 பள்ளி சத்துணவு சமையலறைகளை நவீனப்படுத்த ரூ.1.50/– கோடி (ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் மட்டும்) தொடரா செலவினமாக அரசு ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

3) இதற்கான கூடுதல் நிதியொதுக்கம் மேலே 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் மறு ஒதுக்கீடு (Re-appropriation) மூலம் செய்யப்பட்டுள்ளது.

4) மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

“2236 – சத்துணவு –02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 101 சிறப்புச் சத்துணவு திட்டம் – II மாநிலத் திட்டம் – JN – தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம் நிலை–III – 24 – பொருள்களும் வழங்கலும்.

(த.தொ.கு.எண்.2236–02–101–JN-2401)

5) ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகைக்கு மிகாமல் இரண்டு பர்னர்களுடன் கூடிய பெரிய அளவிலான எரிவாயு அடுப்புகள் வாங்குதல் சமையல் மேடை அமைத்தல் மற்ற பாதுகாப்பு வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச் சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் சம்பந்தப்பட்ட டெண்டர் முறையை பின்பற்றி பணிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும், பள்ளி சத்துணவு சமையலறைகளை நவீனப்படுத்த ஒதுக்கப்படும் நிதியை மாநகராட்சி பகுதியாக இருப்பின் சம்மந்தப்பட்ட மாநகராட்சி ஆணையருக்கும் நகராட்சிப் பகுதியாக இருப்பின் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நிதியை விடுவித்து நகராட்சி ஆணையர் மூலமாக திட்டத்தை செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும்

அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், பள்ளி சத்துணவு சமையலறைகளை நவீனப்படுத்துதல் தொடர்பாக மாதம் ஒருமுறை முன்னேற்ற அறிக்கையை பெற்று அரசுக்கு அனுப்புமாறும் இப்பணி நிறைவு பெற்றபின் அது குறித்த பயனீட்டு சான்றுகளை அரசுக்கு அனுப்புமாறும் சமூக நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6) இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண்.354/து.செ.(B.K) 2006 நாள் 2.1.2007–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நா.ச. பழனியப்பன்,
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை–5
மாநகராட்சி ஆணையர்கள்
சென்னை/ மதுரை/ திருச்சி/ கோயம்புத்தூர்/ சேலம்/ திருநெல்வேலி
நகராட்சி ஆணையர்கள்
வேலூர்/ விழுப்புரம்/ தருமபுரி/ திண்டுக்கல்/ திருநெல்வேலி/
காஞ்சிபுரம்/ திருவள்ளூர்/ கிருஷ்ணகிரி
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர் (கிழக்கு, தெற்கு, வடக்கு)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –18.

நகல்
நிதி (வ.செ.பொ. II ) (சமூக நலம்) துறை, சென்னை– 9
சமூக நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை– 9
இருப்புக்கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

இணைப்பு

| வ. எண் (1) | மாநகராட்சி / நகராட்சி (2) | நவீனபடுத்த எடுத்துக் கொள்ளப்படும் மையங்கள் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1 | சென்னை மாநகராட்சி | 50 |
| 2 | மதுரை மாநகராட்சி | 100 |
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சி | 50 |
| 4 | சேலம் மாநகராட்சி | 50 |
| 5 | திருச்சி மாநகராட்சி | 50 |
| 6 | திருநெல்வேலி மாநகராட்சி | 50 |
| 7 | வேலூர் நகராட்சி | 70 |
| 8 | விழுப்புரம் நகராட்சி | 50 |
| 9 | தருமபுரி நகராட்சி | 57 |
| 10 | திண்டுக்கல் நகராட்சி | 50 |
| 11 | காஞ்சிபுரம் நகராட்சி | 50 |
| 12 | திருவள்ளூர் நகராட்சி | 56 |
| 13 | கிருஷ்ணகிரி நகராட்சி | 67 |
| | **மொத்த மையங்கள்** | **750** |

நா.ச. பழனியப்பன்
அரசு செயலாளர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது.

பிரிவு அலுவலர்